சாதி ஒழிப்பு முன்னணி

Caste Annihilation Front



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

அனுப்புநர்

ரமணி
சாதி ஒழிப்பு முன்னணி
எண்.6, 70 அடிசாலை சுப்புத்தோட்டம், தியாகராய நகர்,
சென்னை-17, 8508726919, aruvi1967@gmail.com

பெறுநர்,

உயர்திரு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
தலைமைச்செயலகம்
சென்னை - 09

பொருள்,

தமிழ்நாட்டில் சாதி மறுத்தக் காதலர்கள், தம்பதிகள்மீது கௌரவம் எனும் பெயரில் தொடரும் சாதி ஆணவக் கொலைகளைத் தடுத்திட தமிழக அரசு சிறப்புச்சட்டம் இயற்றக்கோரிய மனு தங்களின் மேலான கவனத்திற்கு,

வணக்கம்,

1. தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் கிட்டதட்ட 500க்கும் மேற்பட்ட சாதி ஆணவக்கொலைகள் நடந்திருக்கின்றன. சாதிகௌரவம் எனும் பெயரில் இதுவரை கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலும் பிற்படுத்தப்பட்ட பெண்கள், பட்டியலின ஆண்கள் ஆவர். உதாரணம், விருத்தாச்சலம் கண்ணகி - முருகேசன் (2003), தொடங்கி, திருவாரூர், மாற்றுத்திறனாளி அமிர்தவள்ளி - பழனியப்பன் - கைக்குழந்தை (2014), தருமபுரி இளவரசன்(2013), சேலம், கோகுல்ராஜ் (2015), உசிலம்பட்டி விமலாதேவி(2014), உடுமலை சங்கர்(2016),,கன்னியாகுமரி சிவா-சவுமியா(2013), ஒசூர்,நந்தீஸ் - சுவாதி(2018), திருநெல்வேலி இசக்கிசங்கர் - சத்யபாமா(2018), தூத்துக்குடி பேச்சியம்மாள்-சோலைராஜ்(2019), விருத்தாச்சலம் திலகவதி(2019) கோவை கண்மணி - கனகராஜ்(2019) நாகை ஜனனி(2019), கரூர் ஹரிகரன்(2019), புதுக்கோட்டை சாவித்திரி (2020) திருவண்ணாமலை சுதாகர் (2020) ஆகியோரின் கொலைகள், தமிழகத்தையே உலுக்கிய மிகக்கொடூரமான சாதி ஆணவக்கொலைகளாகும்.

2. இத்தகைய கொடூரக்கொலையை செய்வதற்கு காரணமாக இருப்பது, சாதியபஞ்சாயத்துகள், சாதி சங்கங்கள், பெற்றோர்களால் நியமிக்கப்படும் கூலிப்படைகள், அரசியல் ஆதாயத்திற்காக கட்சிகளால் செய்யப்படுகிறது. ஆணவக்கொலைகளுக்கு பின்புலமாக இருக்கும் இத்தகைய சக்திகள் மீது



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். திமுகவின் புதிய ஆட்சி இதற்கான சிறப்புச்சட்டத்தை இயற்றுவது குறித்து பரிசீலிக்க கோருகிறோம்.

3. சாதி ஆணவக்கொலைகள் கொலைவழக்காக மட்டுமே பார்க்கப்படுவதோடு முடிந்துவிடுகிறது. சாதி ஆணவக்கொலை என்பது வெறும் கொலையல்ல, அது சாதிரீதியானதாகவும், தனிநபர் சுதந்திரம் மற்றும் இருவரின் வாழ்க்கை உரிமை சார்ந்ததாகவும், குறிப்பாக பெண்ணின் உரிமை, தேர்வு செய்யும் சுதந்திரம் ஆகியவற்றோடு சம்பந்தப்பட்டதாகவும் உள்ளது. எவ்வாறு பெண்கள்மீதான பாலியல் பலாத்காரத்திற்கு எதிராக நிர்பயா சட்டம் கொண்டுவரப்பட்டதோ, சாதி தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக வன்கொடுமைத்தடுப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டு வன்கொடுமைகள் தடுக்கப்படுகிறதோ அதுபோல் சாதி ஆணவக் கொலைகளைத் தடுத்திட சிறப்புச்சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்பது எமது கோரிக்கை.

சாதி/மதம் கடந்த திருமணம் குறித்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறுகள்

இந்தியக் குடிமகன்/ள்களாக இருக்கின்ற சட்டத்தால் அனுமதிக்கப்பெற்ற உரிய பருவ வயதை அடைந்தவர்கள், ஆண், பெண் இருவரும் திருமணம் செய்து கொள்ள சட்டம் அனுமதிக்கிறது. திருமணங்கள் மற்றும் திருமணத்திற்கு பிறகான வாழ்க்கை சம்பந்தபட்ட இருவரின் மன விருப்பத்தையே சட்டம் ஏற்கிறது. ஆண்/பெண் இருவரின் மனமொத்த திருமணத்திற்கு சாதியோ, மதமோ, இனமோ, ஏற்றத்தாழ்வு என்ற பாகுபாடோ போன்ற எக்காரணத்தைக்கொண்டும் முன்நிபந்தனை விதிக்க முடியாது என்கிறது இந்திய அரசியல் அமைப்புச்சட்டம். ஆனால், சட்டத்தால் வழங்கப்பட்ட உரிமைகள் அடிப்படையில் ஒருவருக்கொருவர் விரும்பி சாதி மதம் இனம் மொழி கடந்து திருமணம் செய்பவர்களைக் குறிப்பாக சாதி மறுப்புத்திருமணம் செய்பவர்களை சாதி ஆதிக்க மனோபாவத்தோடு, சட்டத்தின் உரிமைகளை மறுத்து கொலைசெய்யப்படுவது சட்டப்படி கொலைக்குற்றமாகும். சட்டம் இத்தகைய வாய்ப்புகளை வழங்கியுள்ளது. ஆனால், நடைமுறையில் இதற்கு மாறாக, சாதி ஆணவப்படுகொலைகள் பரவலாக அதிகரித்துவருவதாலும் அதற்கு எதிரான அரசின் கடுமையான நடவடிக்கைகளும் திருமணம் புரிந்துகொள்பவர்களுக்கான சட்டப்பூர்வ பாதுகாப்பும் வாழ்க்கை உத்தரவாதமும்



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

வழங்க வேண்டியதும் சமூகத்தில் விழிப்புணர்வை முன்னெடுக்கவேண்டியதும் மாநில அரசாங்கத்தின் கடமையாகிறது. என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் உறுப்புகள் (ARTICLE 15.17)

- இ,அ.ச. உறுப்பு -15 “சமயம் / இனம் / சாதி / பாலினம் அல்லது பிறப்பிடம் காரணமாக வேற்றுமை காட்டுவதற்கு தடை.
- அரசு குடிமக்கள் எவர்மீதும் சமயம் / இனம் / சாதி / பாலினம் பிறப்பிடம் இவற்றைக் கொண்டோ அல்லது இவற்றுள் ஏதாவது ஒன்றைக் காரணமாகக் கொண்டோ வேற்றுமை காட்டுதல் கூடாது.
- இ.அ.ச. உறுப்பு - 17 - தீண்டாமை ஒழிப்பு
- எவ்வகையிலும் தீண்டாமையைக் கடைபிடிப்பது கறாராகத் தடை செய்யப்படுகிறது. தீண்டாமை காரணமாக எழும் எந்தவிதமான கேட்டையும் செய்வது தண்டனைக்குரிய குற்றச்செயலாகும்.

III. சிறப்புத்திருமணச் சட்டம் 1954

சிறப்புத்திருமணச்சட்டம் 1954 (Special Marriage Act, 1954) ல் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் முக்கிய அம்சமான, சாதி மதம் கடந்து திருமணம் செய்து கொள்ள விரும்புபவர்கள் இச்சட்டத்தின்கீழ் திருமணத்தைப் பதிவுசெய்துகொள்ளலாம். இன்றும் நூற்றுக்கணக்கான சாதி மறுப்புத் திருமணங்கள் இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படுகின்றன.

IV. சுயமரியாதைத் திருமணச்சட்டம்: தமிழ்நாட்டில் சடங்குகள், புரோகிதர், தாலி, அக்னி, சப்தபதி இல்லாத சுயமரியாதை திருமணங்கள் செல்லும் என்று அறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது 1967ல் இச்சட்ட வரைவு கொண்டுவந்த பின் 1968ல் அதனை சட்டமாக்கினார்.

V. சிறப்புத்திருமணச்சட்டத்தின் பாதகமான அம்சம்:

சிறப்புத்திருமணச்சட்டத்தின்படி திருமணம் செய்துகொள்ள விரும்பும் சம்பந்தப்பட்ட ஆண், பெண் இருவரும் பதிவாளரிடம் பதிவு செய்வதில் நடைமுறை சிக்கல் நீடிக்கிறது. என்னவென்றால், “இத்திருமணத்திற்கு ஆட்சேபம் தெரிவிப்பவர்கள், அறிவிப்பு வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் பதிவாளரிடம்



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

தெரிவிக்க வேண்டும். 30 நாட்களுக்குள் எந்த எதிர்ப்பும் இல்லை என்றால், பதிவாளர் திருமணத்தைப் பதிவு செய்வார்." என்பதே இவை.

எந்த நோக்கத்திற்காக இச்சட்டம் கொண்டுவரப்பட்டதோ அதன் நோக்கத்தையே தடுக்கும்விதமாக அமைந்திருக்கிறது இந்த விதிமுறை. குறிப்பாக, மதம் கடந்த திருமணத்திற்கு பெரும் சிக்கலாகவே இருக்கிறது. ஆக, சிறப்புத் திருமணச்சட்டத்தின்படி பதிவுசெய்திட 30 நாட்கள் அவகாசம் கொடுக்கும் விதிமுறையை நீக்கிடவேண்டும் என்பதைத் தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்

.

சாதி ஆணவக்கொலைகளுக்கு எதிரான நீதிமன்றத்தீர்ப்புகளின் முக்கிய அம்சங்கள்

A). லதா சிங் VS உத்தரபிரதேச அரசு. உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் தலைமை நீதிபதி மார்கண்டே கட்ஜு, வியான் சுதா மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த 2006, சூலை 7 ல் அளித்த தீர்ப்பின் சாராம்சம் மற்றும் ஆணவப்படுகொலை குறித்து பொதுவான வழிகாட்டுதல்கள் பின்வருமாறு,

1. தனது மகனோ, மகளோ சாதி மாறி மதம் மாறி திருமணம் செய்துகொள்வதில் பெற்றோர்களுக்கு உடன்பாடு இல்லையென்றால், தன் மகன்/மகள் உடனான அதிகபட்சம் அவர்கள் சமூக உறவை துண்டித்துக்கொள்ளலாமே ஒழிய, அவர்களை அச்சுறுத்துவதை வன்முறைக்கு உள்ளாக்குவதை, உள்ளாக்கத் தூண்டுவதை துன்புறுத்துவதை அனுமதிக்க முடியாது. ஆகவே, காவல்துறையும் அரசு நிர்வாகமும் சாதி மாறியோ மதம் மாறியோ திருமணம் செய்யக்கூடிய பருவமடைந்த ஆணோ பெண்ணோ துன்புறுத்தலுக்கும் மிரட்டலுக்கும் வன்முறை செயல்களுக்கும் உள்ளாகாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் மற்றும் யாரேனும் அவ்வண்ணம் அச்சுறுத்தல் கொடுத்தாலோ தூண்டினாலோ அவர்களுக்கு எதிராக குற்றவழக்கு நடைமுறையின் படி செயலில் இறங்கி சட்டப்படி அவர்களுக்கு எதிரான உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆணையிடுகிறோம்.
2. வட இந்தியாவில் காப்பஞ்சாயத்துகளும், தமிழ்நாட்டில் சாதியப் பஞ்சாயத்துகளும் சாதி/மதம் கடந்து திருமணம் செய்துகொள்ள விரும்புபவர்கள், அல்லது செய்துகொண்டவர்களுக்கு எதிராக சாதி ஆணவக்கொலைகளை ஊக்குவித்தல் மற்றும் பிற துன்புறுத்தல்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டவகையில்



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

நடப்பதை நாங்கள் கேள்விப்படுகிறோம். இது முற்றிலும் சட்டவிரோதம் எனக் கருதுகிறோம். எனவே இவற்றை இரக்கமற்ற வகையில் தடுத்து நிறுத்தப்பட வேண்டும், கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

3. இந்த சம்பவம் நடப்பது முன்கூட்டியே தெரிந்திருந்தும் அதனை தடுக்க தவறியிருந்தாலோ அல்லது சம்பவம் நடந்தபின்பு குற்றமிழைத்தவர்கள் மற்றும்துணை செய்தவர்கள் மீது சட்டப்படி குற்றவியல் நடைமுறைகளை மேற்கொள்ள தவறினாலோ மாவட்ட ஆட்சியர்-மாவட்ட நீதிபதி, மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் - துணை கண்காணிப்பாளர் மற்றும் இதனுடன் தொடர்புடைய பிற அதிகாரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாங்கள் ஆணையிடுகிறோம். எங்களுடைய கருத்துப்படி, இவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொறுப்புக் கூறவேண்டியவர்கள் ஆவார்கள்."

கடந்த 2011ல் ஆறுமுகம் சேர்வை VS தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு மேற்கண்ட தீர்ப்பை மேற்கோள்காட்டி ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளார்.

B) <u>2014 நவம்பர் மாதம் உசிலம்பட்டி விமலாதேவி ஆணவக்கொலை வழக்கை சிபிஐக்கு மாற்றக்கோரிய வழக்கில் மதுரை உயர்நீதிமன்றம் நீதிபதி வி.ராமசுப்ரமணியன் அளித்த தீர்ப்பின் சாராம்சம்,</u>

4. சாதி மறுப்புத்திருமணம் செய்துகொண்ட இணையர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் குறித்த புகார்களை/மனுக்களை பெறுவதற்கு, மாவட்டந்தோறும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஆகியோரை உள்ளடக்கிய சிறப்புப்பிரிவை மாநில அரசு உருவாக்க வேண்டும். இந்த சிறப்புப் பிரிவுகள் இத்தகைய புகார்களை பெறுவதற்கும் பதிவு செய்வதற்கும் மற்றும் தேவையான ஆலோசனைகளையும் பாதுகாப்பையும் அந்த இணையர்களுக்கு வழங்கவும்

5. 24 மணிநேர உதவி தொலைபேசி எண் ஒன்றை உருவாக்கவேண்டும்.

6. அப்படி பெறப்படும் புகார்களுக்கான முதல் தகவல் அறிக்கைகளை மின்னனு வழியிலேயே உருவாக்குவதற்கான வாய்ப்புகளை தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும்.



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

7. ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்பட்டுள்ள இந்த சிறப்பு பிரிவு இந்த உதவி தொலைபேசி எண் வழியாகவும் இன்னபிற வழிகளிலும் பெறப்பட்ட புகார்கள்,, அதில் பதிவுசெய்யப்பட்டவை மற்றும் உரிய காவல்துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஆகியவை குறித்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

8. புகார் அளித்த இணையர்களுக்கு பாதுகாப்பு தரவேண்டியது அவர்கள் இருக்கக்கூடிய காவல்நிலைய எல்லைக்குட்பட்ட காவல்நிலையத்தின் உயர் அலுவலரின் கடமையாகும். அத்தகைய பாதுகாப்பை தரப்படுவதை உறுதி செய்வதற்கு, உதவி தொலைபேசிஎண் மற்றும் இன்னபிற வழியில் பெறப்பட்ட புகார், இந்த ஆபத்திற்கு உள்ளாகியிருக்கும் இணையர்கள் நடமாடிக் கொண்டிருக்கக்கூடிய எல்லைக்குட்பட்ட காவல்நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்கப்படுவதை இந்த சிறப்புப் பிரிவு உறுதிசெய்ய வேண்டும். இணையவழிப்பதிவை சாத்தியப்படுத்த முடிந்தால், உரிய காவல் நிலையத்திற்கு அந்த புகார் உடனடியாக சென்று சேர்வதை எளிதாக்க முடியும். இணையரின் வேண்டுகோள் சிறப்புப் பிரிவால் உரிய காவல்நிலையத்திற்கு அனுப்பப்பட்ட தருணத்திலிருந்து அவர்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டியது அந்த காவல்நிலையத்தின் ஆய்வாளரின் கடமையாகும்.

9. இந்த சிறப்புப்பிரிவு வெறுமனே பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கும் இணையர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது மற்றும் அவர்களை துரத்திக்கொண்டிருக்கும் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது என்பதோடு தனது கடமையை சுருக்கிக்கொள்ளாமல், இணையர்களின் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான முன்முயற்சியுடன் கூடிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

10. ஆணவக்கொலைகள் என்ற தீமை ஒழிக்கப்படும் நோக்கத்திற்கு தேவையான நிதியை மாநில அரசு ஒதுக்க வேண்டும். மாவட்டந்தோறும் உள்ள இந்த சிறப்புப் பிரிவுகள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் நிதியை ஒதுக்க வேண்டும்.

11. சாதி மறுப்புத் தம்பதிகளுக்கு தற்காலிக இருப்பிடங்களை ஏற்பாடு செய்வதற்கும் தேவைப்படும்இடத்து மறுவாழ்விற்கு வழி செய்வதற்கும் சிறப்புப் பிரிவால் இந்த நிதி பயன்படுத்தப்படவேண்டும்.



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

12. இந்த சிறப்புப் பிரிவு, இந்த நிதியைக்கொண்டு, உளவியல் ஆலோசனை நிபுணர்களின் சேவையை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

13. ஏதேனும் விரும்பத்தகாத நிகழ்வு நடக்குமாயின், இந்த சிறப்புப் பிரிவு, இணையர்களை பாதுகாக்கும் கடமையிலிருந்து தவறிய அதிகாரிகளை பொறுப்பாக்க வேண்டும். பாதுகாப்புத்தர தவறுதல் என்பது முக்கியமான கடமை மீறலாக பார்க்கப்பட வேண்டும்.

14. மாநில அரசு சிறப்புப் பிரிவுகளை உருவாக்கி மேற்சொன்ன நடவடிக்கைகளை மூன்று மாத காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும்.

c). சக்திவாகினி vs இந்திய ஒன்றிய அரசு - 2008ல் சாதி ஆணவக்கொலைகளை தடுத்திடவும், ஏற்கனவே நிகழ்ந்தவற்றிற்கான விசாரணையைத் தொடங்கவும் கோரிய உச்சநீதிமன்றத்தில் தொடக்கப்பட்ட பொதுநல வழக்கில் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, ஏ.எம் கன்வில்கர் மற்றும் டிஒய்.சந்திரசூட் ஆகியோர் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பில்

1. சாதி ஆணவக்கொலைகளுக்கு எதிராக தனிச்சட்டம் இயற்றவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதைத்தடுப்பதற்கும் நிவாரணத்திற்கும் தண்டிப்பதற்குமான வழிவகைகளும் அத்தீர்ப்பில் தரப்பட்டன. தேசிய சட்ட ஆணையம், ஆணவக்கொலையை தடுக்கும் நோக்கில் சட்ட ஆணையம் 242வது அறிக்கையில் திருமண சம்பந்தமான சுதந்திரத்தில் குறுக்கிடுவதை தடை செய்யும் சட்ட வரைவு முன்வைக்கப்பட்டது. அது ஒத்திசைவு பட்டியலில் வருவதால் மாநில அரசுகளிடமும் ஒன்றிய அரசு கருத்து கேட்கப்பட்டது. 21 மாநிலங்கள் சட்டம் இயற்றுவது தொடர்பாக ஏற்பளித்தன. இது தொடர்புடைய அனைவரிடமும் கருத்து கேட்டவுடன் சட்ட வரைவை உருவாக்குவதுதான் ஒன்றிய அரசின் நிலைப்பாடு. ஆணவக்கொலை உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கு அவ்வபோது தேவையான பற்பல ஆலோசனைகளை மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று ஒன்றிய அரசு உச்சநிதிமன்றத்தில் பதில் அளித்துள்ளன. இதேவழக்கில் பஞ்சாப் அரியானா, ஜார்கண்ட், டெல்லி, ராஜஸ்தான் பீகார், இமாச்சலபிரதேசம் ஆகிய மாநிலங்களும் நிலைப்பாட்டை முன்வைத்தன. காப்பஞ்சாயத்து சார்பாக, மனுசி சங்கர்தன் என்ற தரப்பும் மனு தாக்கல் செய்தது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டபின் ஆணவக்கொலைகளை தடுத்திட தனிச்சட்டம் இயற்ற வேண்டும் என்று பரிந்துரைத்ததோடு, அப்படியான சட்டம்



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

இயற்றப்படும்வரை சாதி ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கும் நிவாரணத்திற்கும் உரிய வழிவகைகள் தீர்ப்பில் கூறப்பட்டது.

சட்டம் இயற்றுவதற்கு முன் அரசு செய்யப்படவேண்டியவை

1. கடந்த 5 ஆண்டுகளில் ஆணவக்கொலைகள் மற்றும் கட்டப்பஞ்சாயத்துகள் நடந்த மாவட்டங்கள் வட்ட,கிராமங்கள் மாநில அரசுகளால் அடையாளம் காணப்படவேண்டும்.

2. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களில், காவல்நிலைய ஆய்வாளர்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாதி/மதம் கடந்த திருமணங்கள் நடப்பது தெரியவந்தால், அவை குறித்து கூடுதல் எச்சரிக்கையுடன் இருப்பதை அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் உறுதிசெய்யவேண்டும் என்ற ஆணையை அந்தந்த மாநிலங்களின் உள்துறை செயலாளர் அனுப்ப வேண்டும்.

3. சாதியபஞ்சாயத்துகளின் கூட்டம் கூடவிருப்பது காவல் அதிகாரிக்கு தெரியவந்தால், அத்தகவலை உடனடி மேல் அதிகாரிக்கும் காவல் எல்லைக்குட்பட்ட மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளருக்கும், காவல் கண்காணிப்பாளருக்கும் தெரிவிக்க வேண்டும்.

4. அத்தகைய தகவலை பெற்றவுடன் காவல்துறை துணை கண்காணிப்பாளர் சாதியபஞ்சாயத்து உறுப்பினர்களை பேசி அப்படி கூட்டம் கூட சட்டப்படி அனுமதி இல்லை என்று தெரிவிக்க வேண்டும். கூடவே கூட்டம் கூடுவதை தடுப்பதற்கு இந்த காவல் எல்லைக்குட்பட்ட காவல் அதிகாரி கண்காணிப்புடன் இருக்கவும் தேவைப்பட்டால், போதுமான காவலர்களைப் பயன்படுத்தவும் உரிய ஆணை வழங்க வேண்டும்.

5. இந்த நடவடிக்கைகளை எடுத்தும், சாதியபஞ்சாயத்து கூட்டம் நடக்குடமாயின், காவல் துறை கண்காணிப்பாளர் அந்தகூட்டம் நடக்கும்போது, அங்கே இருக்க வேண்டும். இணையர்களுக்கோ இணையர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கோ ஊறு செய்யும் வகையில், எந்த முடிவும் எடுக்கக்கூடாது என்று வலியுறுத்துவதோடு, அப்படி தவறம் பட்சத்தில் கூட்ட ஏற்பாட்டாளர்கள் மட்டுமின்றி கூட்டத்தில் பங்குபெறும் ஒவ்வொருவரும், குற்றவியல் நடைமுறைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதை தெரிவிக்க வேண்டும். மேலும், கூட்டத்தில் நடக்கும் கலந்துரையாடலையும் பங்கேற்பாளர்களையும் காணொளிப் பதிவ செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

6. சாதியபஞ்சாயத்து உறுப்பினர்களிடம் பேசிய பிறகும் கூட்டம் நடைபெறுவதை தடுக்க முடியாது என்றோ, இணையர்களுக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கம் தீங்கு ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்றோ, காவல் துணை கண்காணிப்பாளர் கருதும் பட்சத்தில் மாவட்ட நீதிபதி அல்லது சப் டிவிசனல்



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

மேஜிஸ்ரேட் அணுகி குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் அடிப்படையில் 144 தடைஉத்தரவு போடுவது, பிரிவு 151ன்படி கட்டப்பஞ்சாயத்து பங்கேற்பாளர்களை கைது செய்வது உள்ளிட்ட முன் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கான முன்மொழிவை தர வேண்டும்.

7. இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், மாநில அரசுகளோடு, மாநில அரசுகளோடு இணைந்து சட்டம் ஒழுங்கு காக்கும் நிறுவனங்களுக்கு உணர்வு ஊட்டவும் இத்தகைய வன்முறையை தடுப்பதற்கான வழிவகைகளை கண்டறிய அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்தவும் அரசமைப்புச் சட்டத்தின் லட்சியமான சமூகநீதியையும் சட்டத்தின் ஆட்சியையும் நடைமுறைப்படுத்தவும் முன்முயற்சி எடுக்க வேண்டும்.

8. அனைத்துப் பங்குதாரர்களிடையே தேவையான ஒத்துழைப்பைக் கொண்ட நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள பொறியமைவு இருக்கவேண்டும்.

9. மாநில அரசும் மத்திய அரசும் சட்டம் ஒழுங்கு நிறுவனங்களுக்கு உணர்வூட்டி இத்தகைய வன்முறைகளை ஒழிப்பதற்கு விழிப்புணர்வும் சமூக முன்னெடுப்புகளையும் செய்வதற்கு உழைக்க வேண்டும்.

<u>மாநில காவல்துறை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்</u>

1. காவல்துறைக்கு சாதியபஞ்சாயத்து நடைபெற்றது பற்றியோ அங்கு சாதிமதம் மீறி திருமணம் செய்துகொண்ட இணையர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கு எதிரான முடிவுகள் எடுக்கப்பட்டது குறித்து தெரிய வந்தால், அந்த காவல்துறையினர் உடனடியாக தகுந்த சட்டப்பிரிவின்கீழ் ஐபிசி பிரிவு 141,143,503,506 முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ய வேண்டும்.

2. முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட விசயத்தை பொறுப்பில் இருக்கும் காவல் கண்காணிப்பாளர், துணை கண்காணிப்பாளருக்கு தெரிய படுத்தவேண்டும். நடந்த குற்றத்தை பற்றிய பயனுள்ள தர்க்கரீதியான விசாரணை உடனடியாக நடத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

3. மேலும் தம்பதியினர் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கான பாதுகாப்பிற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அவர்களின் மீதான பாதுகாப்பின்மையை கருத்தில் கொண்டு, அவர்களை வீடுகளிலிருந்து வெளியேற்றி பாதுகாப்பான இடத்தில் அதே மாவட்டம் அதற்கு வெளியேயான இடத்தில் பாதுகாப்பாக தங்கவைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் மாநில அரசு இதற்கான பாதுகாப்பான இல்லங்களை ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் இந்த



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

பயன்பாட்டிற்காக உருவாக்க வேண்டும். அந்த இல்லங்கள் சாதியபஞ்சாயத்து - பகுதி மக்கள் - பெற்றோர்கள் சமூகங்கள் ஏற்றுகொள்ளாமல் எதிர்க்கும் காதலர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கவேண்டும்.

4. சாதி மதம் மீறி அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காக குடும்பங்களால் பகுதி மக்களால் சமூகங்களால் சாதியபஞ்சாயத்தால் எதிர்க்கப்படும் மண மக்களின் பாதுகாப்புக்கானதாக இருக்க வேண்டும். அந்த இல்லங்கள் மாவட்ட நீதித்துறை நடுவர், மாவட்ட கண்காணிப்பாளர் மேற்பார்வையில் இருக்கவேண்டும்.

5. மாவட்ட நடுவர்-காவல்துறை கண்காணிப்பாளர், அச்சுறுத்தப்படும் இணையர்கள் அவர்களது குடும்பத்திலிருந்து வரும் புகாரை கவனத்துடன் அணுக வேண்டும். நாடி காதலர்கள் திருமண வயதை அடைந்தவர்களா என்பதை அறிந்துகொள்ள வேண்டும். தேவைப்பட்டால் அவர்கள் திருமண வயதுடையவர்கள் எனும் பட்சத்தில் அவர்களுக்கு சட்டப்பூர்வமாக திருமணத்தை நடத்த உதவி செய்ய வேண்டும். அந்த திருமணத்தைப் பதிவு செய்வதற்கும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை கொடுக்க வேண்டும். அந்த தம்பதிகள் விருப்பப்பட்டால், அவர்களுக்கான பாதுகாப்பான தங்கும் வசதியை குறைந்தபட்சம் ஒரு மாதத்திறகு அதிபட்சமாக ஒரு வருடம் வரை அவர்களின் மீதான அச்சுறுத்தலை மனதில் கொண்டு ஏற்பாடு செய்துதரவேண்டும். “

……,……

சாதி ஆணவப்படுகொலைகளுக்கு எதிராக இத்தகைய பல்வேறு சிறப்பு அம்சங்களைக்கொண்ட தீர்ப்புகளையே தமிழக அரசு முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். 2008ல் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா அமர்வு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் மாநில அரசு சிறப்புச்சட்டம் இயற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆணவக்கொலைகளுக்கு ஆதரவான அதிமுகவின் போக்கு

கடந்த 2014ல் தேசியக் குற்றப்பிரிவு ஆவண ஆணையத்தில் தமிழ்நாட்டில் சாதி ஆணவப்படுகொலைகள் நடக்கவில்லை என பதிவுசெய்திருக்கிறது அதிமுக அரசு. 201ல் அதிமுக அரசு, 1 கொலை மட்டுமே நடந்துள்ளதாக பதிவுசெய்திருக்கிறது. 2018ல் உச்சநீதிமன்றம் ஒவ்வொரு மாநிலத்திலும் சாதி ஆணவக்கொலைகள் குறித்து அறிக்கை அளிக்கும்படி கோரியது. அவற்றில் 22 மாநிலங்கள் அறிக்கையை தாக்கல் செய்திருக்கின்றன. ஆனால், அதிமுக ஆட்சியில் இருந்தவரை மௌனம் காத்தது. அதிமுகவின் துணைத்தலைவர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், “தமிழ்நாட்டில் ஆணவக்கொலைகள் எதுவும் நடைபெறவில்லை. இரு சமூகத்தைச்



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

சேர்ந்த இருபாலரிடையே ஏற்படும் காதல் சம்பவங்களில் ஏற்படும் பிரச்சனைகளில் தற்கொலை செய்துகொள்வது சந்தேக முறையில் மரணமடைவது போன்ற சம்பவங்கள் மட்டுமே எப்பொழுதாவது நடைபெறுகின்றன. அச்சம்பவங்களில் காவல்துறையின் சட்டப்படி அதற்குக் காரணமானவர்கள்மீது தற்போது நடைமுறையில் உள்ள இந்திய தண்டனைச்சட்டப்பிரிவுகளின்படி கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். எனவே சாதி மோதல்களைத் தடுக்கவும் சாதிப்பிரிச்சனைகளில் ஏற்படும் மரணங்களைத் தடுக்கவும் தற்போதுள்ள சட்டங்களே போதுமானவையாகும். மேலும், புதியதாக சட்டம் இயற்றத் தேவை எதுவும் தற்போது எழவில்லை" என அப்பட்டமாக பொய்யை சொன்னார்.
அதிமுக அரசின் இத்தகைய சமூக நீதிக்கு எதிரான செயலால் சாதிவெறி அரசியலும் ஆணவப்படுகொலையும் தமிழ்நாட்டில் அதிகரிக்கவே வழிவகுத்தது.

.....

இராஜஸ்தான் மாநில அரசு இயற்றிய சிறப்புச்சட்டம் -2019

கடந்த 2019ஆம் ஆண்டு, இராஜஸ்தான் மாநில காங்கிரசு அரசு, **"THE RAJASTHAN PROHIBITION OF INTERFERENCE WITH THE FREEDOM OF MATRIMONIAL ALLIANCES IN THE NAME OF HONOUR AND TRADITION BILL, 2019"** "திருமண விருப்பங்களின் சுதந்திரத்தில், பெருமை, பாரம்பரியத்தின் பெயரால் தலையிடுவதைத் தடை செய்யும் ராஜஸ்தான் அரசின் சட்டம் ***2019."*** என்கிற சட்டத்தை இயற்றியுள்ளது. இந்தியாவிலேயே ஆணவக்கொலைகளுக்கு எதிரான தனிச்சட்டம் இயற்றிய மாநிலம் ராஜஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அச்சட்டத்தின் முக்கியக் கூறுகள் பின்வருவன,

- தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாப்பது மற்றும் பழிவாங்குதல் சட்டவிரோத கூடுகைகள் மற்ற நடத்தைகள் **0020**மூலம் பெருமை மற்றும் பாரம்பரியம் என்ற பெயரில் திருமண விருப்பங்களின் சுதந்திரத்தில் குறுக்கிடுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதைச்சார்ந்த விஷயங்களை தடை செய்வது.

I. செயல்கள்:



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

- சம்பந்தப்பட்ட கிராமம் அல்லது வசிக்கும் இடத்தை விட்டு வெளியேற தம்பதியர் அல்லது அவர்களது குடும்பங்கள் அல்லது உறவினர்கள் மீது அழுத்தம் கொடுப்பது;

(ii), சம்பந்தப்பட்டவர்கள் சமூக வசதிகள், வழிபாட்டுத் தலங்கள் அல்லது வாழ்க்கையின் வேறு ஏதேனும் தேவைகளுக்கு அணுகுவதற்கு இடையூறு கொடுப்பது

- தம்பதியினரையோ அல்லது அவர்களது குடும்பத்தினரையோ அவர்களுக்கு சொந்தமான எந்தவொரு நிலம் அல்லது சொத்திடமிருந்து பிரித்தல் அல்லது வெளியேற்றுவது அல்லது அபராதம் விதித்தல்;

- உடல் ரீதியாகவோ அல்லது மனரீதியான துன்புறுத்தல் விளைவித்தல்

II. சட்டவிரோதக் கூட்டம் :

- எந்தவொரு நபரும் அல்லது நபர்களும் எந்தவொரு சட்டத்தின் மூலம் தடைசெய்யப்படாத, எந்தவொரு திருமணத்தையும் சாதி, வட்டாரம், பாரம்பரியத்திற்கும் பெருமைக்கும் அவமதிப்பை ஏற்படுத்துகிறது என்று வேண்டுமென்றே அல்லது தடுக்கும் நோக்கத்தோடும் எந்த நேரத்திலும் ஒன்றுகூடவோ கூடாது.
- அத்தகைய கூடுகை அல்லது சபை சட்டவிரோதமாகக் கருதப்படும்.

III. தனிநபர் சுதந்திரத்திற்கு எதிரானது

1) சட்ட விரோதமாக கூட்டப்பட்ட கூட்ட உறுப்பினர்கள் தம்பதியினரிடமோ அல்லது அவர்களது ஆதரவாளர்களிடமோ விரோதப் போக்கை உருவாக்குவதென்பது, அவர்களின் சுதந்திரத்திற்கு ஆபத்து விளைவிக்கும் செயலாகக் கருதப்படும், மேலும் இதுபோன்ற ஆபத்தான செயல்களுக்கு இரண்டு வருடங்களுக்கும் குறையாத காலத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும், அது ஐந்து வருடங்களுக்கு நீட்டிக்கப்படலாம், மேலும் ஒரு லட்சம் ரூபாய் வரையான அபராதமும் விதிக்கலாம்

2) துணைப்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தம்பதியினரின் சுதந்திரத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் செயல்களில் ஈடுபடும் சட்டவிரோத கூட்டத்தின் எந்தவொரு உறுப்பினர் அல்லது அவர்களின் ஆதரவாளர்களும் இதேபோல் தண்டிக்கப்படுவார்கள்.

IV. குற்றவியல் மிரட்டல்.-

சட்டவிரோத கூட்டத்தின் எந்தவொரு உறுப்பினரும் அல்லது உறுப்பினர்களும் அல்லது அவர்களின் நிகழ்வில் செயல்படும் வேறு எந்த நபரும், சட்ட பூர்வமான திருமனத்தை சட்டவிரோத முடிவுக்கு இணங்குவதற்கான நோக்கத்துடன், தம்பதியரை



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

அல்லது அவர்களது உறவினர்கள் அல்லது ஆதரவாளர்களை குற்ற மிரட்டலில் ஈடுபடுவது மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு அல்லது, ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படக்கூடிய சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும்

- இந்திய தண்டனைச் சட்டம், 1860 (1860 ஆம் ஆண்டின் மத்திய சட்டம் எண் 45) இன் பிரிவு 506 இன் இரண்டாம் பாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தின் படி தீங்கு அல்லது காயம் ஏற்பட அச்சுறுத்தல் இருந்தால், அதிகபட்ச சிறைத்தண்டனை ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கலாம்

- சட்டவிரோதமாக நடக்கும் கூட்டத்தில் பங்கு பெரும் ஒவ்வொருவரும் 4 மற்றும் 5 பிரிவுகளின் கீழ் குற்றச்செயல் புரிந்தவர்களாக கணக்கில் கொள்ளப்படும்.

V. கொலை:

- சாதி ,சமூகம் , குடும்பத்தின் பெருமைக்கு ,மரியாதைக்கு ஊறு விளைவித்ததாக கூறி இணையர்கள் அல்லது அவர்களில் ஒருவரை கொன்றால் மரன தண்டனை அல்லது எஞ்சியுள்ள ஆயுள் முழுவதுஆன சிறைத்தண்டனையோடு ரூபாய் 5லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்

VI. கடும் காயம் ஏற்படுத்துதல்

- சாதி, சமூகம்,குடும்பத்தின் பெருமைக்கு,மரியாதைக்கு ஊறு விளைவித்ததாக கூறி இணையர்கள் அல்லது அவர்களில் ஒருவருக்கு கடுமையான காயம் விளைவித்தால் அவர்களுக்கு 10 வருடத்திற்கு குறையாத கடுமையான சிறைத்தண்டனை அல்லது எஞ்சியுள்ள ஆயுள் முழுவதுமான சிறைத்தண்டனையோடு ரூபாய் 3 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்.

VII. சிறு காயம் ஏற்படுத்துதல்

- சாதி ,சமூகம் ,குடும்பத்தின் பெருமைக்கு ,மரியாதைக்கு ஊறு விளைவித்ததாக கூறி இணையர்கள் அல்லது அவர்களில் ஒருவருக்கு சிறு காயம் விளைவித்தால் அவர்களுக்கு 3வருடத்திற்கு குறையாத அல்லது 5 வருடம் வரை நீட்டிக்ககூடிய கடுமையான சிறைத்தண்டனையோடு ரூபாய் 2 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்

VIII. குற்றத்தை தூண்டுபவர் உதவுபவர்



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

- இக்குற்றத்தினை சதி செய்பவர், முயற்சிப்பவர்,தூண்டுபவர்,இக்குற்றத்திற்கு துனையாயிருப்பவர்,உதவுபவர் என அணைவரும் இக்குற்றம் புரிந்தவர்களாக கருதி தண்டிக்கப்படுவர்

IX. இச்செயல்கள் நடக்காமல் இருக்க எடுக்கவேண்டிய தடுப்பு நடவடிக்கைகளுக்கான அதிகாரங்கள்.

- துணை நிலை நடுவர் அல்லது மாவட்ட நடுவர் கீழ்கண்ட புகார்களை பெற வேண்டும்
- சட்ட விரோதமான கூட்டத்தின் அல்லது சட்ட பூர்வ திருமணத்தை எதிர்க்கும் கூட்டத்தின் மிரட்டல்களிலிருந்து தனி மனிதருக்கோ அல்லது மனிதர்களுக்கான பாதுகாப்பு கோரிக்கை பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்
- நடந்த அல்லது நடக்கவிருக்கும் திருமணத்திற்கு எதிரான நோக்கத்துடன் கூடும் சட்ட விரோத கூட்டத்தை தடுக்க வேண்டும் அது திட்டமிட்ட செயல்களைத் தடுத்து இத்தடைச்சட்ட கூற்றுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அப்பகுதியில் உள்ள காவல்துறை அதிகாரிகளுக்குத் தேவைப்படும் வழிகாட்டுதல்களையும் உத்தரவையும் அளிக்க வேண்டும்.
- சட்ட விரோத கூட்டத்தால் குறிவைக்கப்படும் நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும்.
- சட்ட விரோத கூட்டத்தால் குறிவைக்கப்படும் நபர்களின் பாதுகாப்பு நடவடிக்கையை நேரடியாக கண்காணிக்க வேண்டும்

X. குற்றவியல் சட்ட நடைமுறை

- இந்த குற்றங்கள் குற்றவியல் நடைமுறைச்சட்டம் **1973** (மத்திய சட்ட **(2)1974)** ன் கீழ் உயர் நீதிமன்றத்தால் குறிப்பிட்ட அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவதை அரசிதழில் அறிவிக்கவேண்டும்
- அமர்வு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை செய்திருப்பாரா ,குற்றத்தின் மீதான புகார் காவல்துறை அறிக்கை போன்றவற்றை பரிசீலிக்க வேண்டும்
- குற்றம் சாட்டப்பட்டவர் இந்த சட்டத்தின் படியாக மட்டுமல்லாமல் வேறு வகையான குற்றங்களை செய்திருந்தால் அவற்றையும் குற்றவியல் நடைமுறைச்சட்டம் **1973** (மத்திய சட்ட **(2)1974)** ன் கீழ் சேர்த்து விசாரிக்க வேண்டும்.
- குற்றம் சாட்டப்பட்டவர் இந்த சட்டத்தின் படியாக மட்டுமல்லாமல் வேறு வகையான குற்றங்களை செய்திருந்தால் அவற்றையும் சேர்த்து விசாரித்து



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

அந்த குற்றச்செயலுக்கான சட்ட பூர்வமான தண்டனையையும் அறிவிக்க வேண்டும்

- குற்றவியல் நடைமுறை, 1973 (1974 இன் மத்திய சட்டம் எண் 2) இந்த சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள் அறிந்தே செய்யக்கூடிய, ஜாமினில் வரமுடியாத, கட்டுப்படுத்த முடியாத தன்மையில் உள்ளவை
- குற்றவியல் நடைமுறை, 1973, 1974 இன் மத்திய சட்டம் எண் 2 ஆகியவற்றின் கீழ் இந்த சட்ட நடைமுறைகள் இருக்கும்
- இந்த சட்டம் மற்ற சட்டங்களுக்கு கூடுதலானதாக இருக்கும் முரணாக இருக்காது.

இத்தகைய தீர்ப்புகளை முன்னுதாரணமாகக் கொண்டு தமிழக அரசு சிறப்புச்சட்டம் இயற்ற வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

முன்னோடியான மாநிலம்

தமிழ்நாடு சுயமரியாதை, சமூக நீதி, சனநாயகத்தை நிலைநாட்டிய தந்தை பெரியாரின் மண் என்ற பெருமைக்குரிய மாநிலம். வளர்ச்சியில் இடஒதுக்கீட்டில் முன்னோடியானவை. தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாய் பெண்கள் கல்விபெறுவதும் நகரம் நோக்கி வேலைக்கு வருவதும் சுயமாக முடிவெடுப்பதுமான சமுதாய வளர்ச்சி மாற்றங்களுக்கு வித்திட்டுள்ள தமிழ்நாடு. பெயருக்குப் பின்னால் சாதிப்பெயரை பயன்படுத்துவதை அழித்த போராட்ட மாநிலம், பெண்களுக்கு சொத்துரிமையை நிலைநாட்டிய, சாதி மறுப்புத் தம்பதிகளுக்கு ஊக்கத்தொகையை நடைமுறையாக்கிய மாநிலம், மற்றும் தீண்டாமை ஒழிய சமத்துவபுரம் திட்டத்தை செயலாக்கிய திமுக ஆட்சி என்கிற சிறப்பம்சங்கள் கொண்ட தமிழ்நாட்டில் சாதிமறுப்பு திருமணம் புரிந்துகொள்ளும் காரணத்திற்காகவே சம்பந்தப்பட்ட இளம் பெண்கள், ஆண்கள் கொடூரமாகக் கொல்லும் சாதி ஆணவப்படுகொலை செய்யப்படுவது - சாதி வெறுப்புக்குற்றங்கள் நடப்பது மனிதமாண்பையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு முனைப்புக் காட்ட வேண்டும். சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவிக்க வேண்டும். மக்களிடையே சாதி, தீண்டாமை, சாதி மாறிய திருமணம் குறித்த அறிவியல்பூர்வ விழிப்புணர்வை முன்னெடுத்தால் சாதிய சிந்தனையில் மாற்றம் ஏற்படும். சட்டத்தின் வழியில் இதனைத்தடுப்பது ஒருபுறமும் சமூகத்தை சீர்திருத்துவது மற்றொரு புறமாகவும் நாணயத்தின் இருபக்கங்கள் போல் தமிழக அரசு இதற்கு வினையாற்ற வேண்டும் எனக் கோருகிறோம்.

தமிழ்நாட்டில் தொடரும் சாதி ஆணவப்படுகொலைகள்-சாதிவெறுப்புக் குற்றங்களைத் தடுத்திட சிறப்பு சட்டம் இயற்ற வேண்டும் என்ற கோரிக்கை

சாதி ஒழிப்பு முன்னணி
Caste Annihilation Front

எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

பல்வேறு இயக்கங்களால் மனித உரிமையாளர்களால், ஜனநாயக சக்திகளால் நீண்ட காலமாக வலியுறுத்தப்படுகின்றன. சாதியப்பஞ்சாயத்து முறைகளுக்குத் தடைவிதித்து, சாதி மறுப்பு இணை தேர்வுக்கு எதிராக வன்முறை செலுத்தும் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். எனவே, தமிழக அரசு சாதி ஆணவப்படுகொலைகளைத் தடுத்திட சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

ஆதரவளித்துள்ள அமைப்புகள்

1. ரமணி, சாதி ஒழிப்பு முன்னணி
2. கொளத்தூர்மணி, தலைவர் திராவிடர் விடுதலைக்கழகம்
3. அரங்க குணசேகரன், தலைவர், தமிழக மக்கள் புரட்சிக்கழகம்
4. கோவை இராமகிருஷ்ணன், தந்தைபெரியார் திராவிடர் கழகம்
5. பேரா.அ.மார்க்ஸ்,தலைவர்,தேசியமனித உரிமைஅமைப்புகளின் கூட்டமைப்பு
6. பேரா. பிரபா கல்விமணி, அமைப்பாளர், மக்கள் கல்வி இயக்கம்
7. வசந்திதேவி, கல்வியாளர்
8. மீ.த.பாண்டியன், தலைவர், தமிழ்த்தேச மக்கள் முன்னணி
9. தியாகு, தலைவர், தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம்,
10. பெ.மணியரசன், தலைவர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்
11. உதயகுமார், நிறுவனர், பச்சைத் தமிழகம் கட்சி
12. இளங்கோ, தலைவர், பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்
13. வினோத், தலைவர், ஆதித்தமிழர் விடுதலை இயக்கம்
14. ஜக்கையன், தலைவர், ஆதித்தமிழர் கட்சி
15. ஆரோக்கியமேரி, மாநிலச் செயலாளர், தமிழ்நாடு பெண்கள் இயக்கம்
16. மஞ்சுளா, மாநிலச் செயலாளர், இந்திய மாதர் தேசிய சம்மேளனம்
17. ரேவதி, அமைப்புக்குழு தலைவர்,அகிலஇந்திய முற்போக்குபெண்கள் கழகம்
18. அமிர்தா, சென்னை மண்டல ஒருங்கிணைப்பாளர், மக்கள் அதிகாரம்,
19. செல்வமணியன், தமிழ்நாடு பொதுவுடமைக் கட்சி
20. கண.குறிஞ்சி, தலைவர், மக்கள் சிவில்உரிமைக் கழகம்
21. பேரா.சரசுவதி
22. பேரா, சிவக்குமார்
23. வ.கீதா, ஆய்வாளர்
24. கிறிஸ்துதாஸ் காந்தி, ஓய்வுப்பெற்ற IAS அதிகாரி



எண்.6, 70 அடி சாலை, சுப்புத்தோட்டம்,
தியாகராய நகர், சென்னை 17
85087 26919, 95660 87526

25. பேராசிரியர் லட்சுமணன், MIDS
26. கோபி நயினார், திரைப்பட இயக்குநர்
27. சேகர், ஒருங்கிணைப்பாளர், தொழிலாளர் சீரமைப்பு இயக்கம்
28. புலிப்பாண்டியன், மாநில துணைப்பொதுச்செயலாளர், ஐந்திணைமக்கள் கட்சி
29. இரத்தினம் வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்,
30. சங்கரசுப்பு, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
31. ப.ப.மோகன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
32. பாவேந்தன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
33. அஜிதா, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
34. லிங்கன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
35. இனியவன், மாநில அமைப்பாளர், சாதி ஒழிப்பு இயக்கம்
36. ஷெரின், ஒருங்கிணைப்பாளர், கல்வித்தாய்சாவித்திரிபாய்பெண்கள் இயக்கம்
37. கௌசல்யா, சாதி எதிர்ப்பாளர்
38. தோழர் வேடியப்பன், சமூக செயற்பாட்டாளர்
39. மருதுபாண்டியன், சோசலிச மையம்
40. அருங்குணம் விநாயகம்,
41. நீலமேகம், தலைவர், புரட்சியாளர் அம்பேத்கர் மக்கள் பாசறை
42. ஏழுமலை, ஒருங்கிணைப்பாளர், அம்பேத்கர் எழுச்சி இயக்கம்,
43. கருணாநிதி, ஒருங்கிணைப்பாளர்,ஒடுக்கப்பட்டசாதிகள்விடுதலை முன்னணி
44. மதிப்பறையனார், தலைவர், அம்பேத்கர் மக்கள் படை
45. பெலிக்ஸ், மாநில ஒருங்கிணைப்பாளர், கிறித்தவ மக்கள் களம்
46. தமிழ்ச்செல்வன், ஒருங்கிணைப்பாளர், பஞ்சமி நிலம் மீட்புக்கழகம்